**ஜூலை – 27**

# TNPSC துளிகள்

- ❖ மத்திய அரசின் முதன்மைத் திட்டமான "ஆயுஷ்மான் பாரத்" என்ற திட்டத்தைச் செயல்படுத்தும் "தேசிய சுகாதார ஆணையமானது" மருத்துவச் சேவைகளை அளிப்பதை ஒழுங்குபடுத்துவதற்காகவும் திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்காகவும் இந்திய சுகாதார நலக் கூட்டமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ காந்தியின் 150-வது நினைவு தினக் கொண்டாட்டத்தின் போது, தமிழ்நாடு அஞ்சல் துறையானது "தமிழ்நாட்டில் காந்திஜியின் முதல் அடிச்சுவடு" என்ற கருப்பொருள் கொண்ட சிறப்பு அஞ்சல் உறை மற்றும் அஞ்சல் முத்திரையை வெளியிட்டுள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டு பிர்மிங்ஹாம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் "துப்பாக்கி சுடுதல்" பிரிவில் இருந்து வெளியேற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக செப்டம்பரில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் கூட்டமைப்பின் (Indian Olympic Association - IOA) பொதுச் சபைக் கூட்டத்திலிருந்து இந்திய ஒலிம்பிக் கூட்டமைப்பு வெளியேறியுள்ளது.
- ❖ "தண்ணீர் திருட்டிற்கு" 2 ஆண்டு சிறைத் தண்டனையுடன் மிகக் கடுமையான தண்டனையை அளிக்க வழிவகை செய்யும் "குஜராத் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் (திருத்த) மசோதாவை" குஜராத் நிறைவேற்றியுள்ளது.
- ❖ குஜராத்தில் உள்ள கிர் சரணாலயத்தில் ஒரு சிறப்பு அவசர வாகனத்தின் உதவியுடன் ஒரு சிங்க குட்டி மீட்கப்பட்டுள்ளது.
    - ○ கடந்த மாதம் குஜராத் அரசினால் தொடங்கப்பட்ட சிங்கங்களுக்கான ஒரு சிறப்பு அவசர ஊர்தி சேவை முன்னெடுப்புக்குப் பின்பு நடந்த முதலாவது நிகழ்வு இதுவாகும்.
- ❖ உலகக் கோப்பையை வெல்லக் காரணமாக இருந்த இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரான கபில் தேவின் தலைமையிலான கிரிக்கெட் ஆலோசனைக் குழுவிடம் இந்தியாவின் புதிய பயிற்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
    - ○ முன்னாள் மகளிர் கிரிக்கெட் அணித் தலைவரான சாந்தா ரங்கசாமி மற்றும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் அன்சுமன் கேக்வார்டு ஆகியோர் இக்குழுவில் உள்ள பிற உறுப்பினர்கள் ஆவர்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் நீர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

- ❖ தமிழ்நாடு அரசு நீர்ப் பாதுகாப்பிற்காகப் புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

### *தமிழ்நாடு நீர் வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர் அதிகரிப்புத் திட்டம்*

- ❖ இத்திட்டத்தை மக்களின் இயக்கமாக மாற்றுவதற்கு ஆகஸ்ட் மாதத்தின் முதலாவது வாரத்தில் "தீவிரமான ஒரு வார காலப் பிரச்சாரம்" ஒன்று தொடங்கப் படவிருக்கின்றது.

- இத்திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்நிலைகளின் திறன் அதிகரிப்பு, அவற்றின் பாதுகாப்பு ஆகியவை மேற்கொள்ளப் படவிருக்கின்றன.
- கிராமங்கள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்களில் நீர் பாதுகாப்பு ஆணையங்கள் அமைக்கப் படவிருக்கின்றன.

*நடந்தாய் வாழி காவிரி*

- இது நீர் மாசுபாடுகளிலிருந்து காவிரி நதியைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.


# தேசியச் செய்திகள்

## பொதுக் கணக்குக் குழு

- மக்களவையில் கங்கிரஸ் கட்சியின் தலைவரான அதிர் ரஞ்சன் சௌத்ரி என்பவர் பொதுக் கணக்குக் குழுவின் (Public Accounts Committee - PAC) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- PAC ஆனது 15 உறுப்பினர்களைக் (மக்களவையில் 15 உறுப்பினர்களும் மாநிலங்களவையில் 7 உறுப்பினர்களும்) கொண்டிருக்கும்.
- இக்குழுவில் உள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் ஒரு நேரத்தில் ஒரு வருடத்திற்கு மிகாமல் இருக்கும்.

## நாம்தாபா புலிகள் காப்பகம்

- நாம்தாபா புலிகள் காப்பகத்தில் 53 முன்னணிப் பணியாளர்கள் மற்றும் அனைத்து கடைநிலைப் பணியாளர்களையும் அதிகாரிகள் பணி நீக்கம் செய்துள்ளதால், அச்சரணாலயத்தில் வங்கப் புலிகளின் பாதுகாப்பு பாதிக்கப்பட்டுள்ளது.
- நாம்தாபா பாதுகாக்கப்பட்ட பகுதியானது புலிகள் காப்பகமாகவும் தேசியப் பூங்காவாகவும் விளங்குகின்றது.
- இது இந்தியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளுக்கிடையேயான சர்வதேச எல்லைக்கு அருகில் அருணாச்சலப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவின் மிகவும் கிழக்கில் உள்ள புலிகள் காப்பகமாகும்.




## போக்சோ விரைவு நீதிமன்றங்கள்

- ❖ போக்சோ வழக்குகளுக்காக 60 நாட்களில் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- ❖ இந்த நீதிமன்றங்கள் மத்திய அரசினால் நிதியளிக்கப் படவிருக்கின்றன.
- ❖ பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (POCSO - Protection of Children from Sexual Offences) சட்டத்தின் கீழ் 100 வழக்குகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள பகுதிகளில் இந்தச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப் படுகின்றன.
- ❖ இந்திய உச்ச நீதிமன்றம் தானாக முன்வந்து பதிவு செய்த பொது நல வழக்கின் மீதான விசாரணையின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
- ❖ 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் ஜூன் 30 வரையிலான காலகட்டத்தில் போக்சோ சட்டத்தின் கீழ் ஏறத்தாழ 24,212 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ❖ ஆனால் 911 வழக்குகள் மட்டுமே விசாரணை நீதிமன்றங்களினால் தீர்க்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப் படவிருக்கின்றன.

## 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்ட இடப்பெயர்வுத் தரவு

- ❖ கடந்த வாரத்தில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்ட இடப்பெயர்வுத் தரவின்படி, திருமணம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை இடப்பெயர்வுக்கு முக்கியக் காரணங்களாகும்.
- ❖ ஒரு நபர் அவன்/அவள் பிறந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பில் கணக்கிடப்படும்போது, அவன்/அவள் ஒரு "இடப்பெயர்வாளராக" (புலம் பெயர்ந்தவர்) கருதப்படுகின்றார்.
- ❖ 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் ஏறத்தாழ 45.58 கோடி இந்தியர்கள் "இடம்பெயர்ந்தவர்களாக" கண்டறியப்பட்டுள்ளனர்.

- ஏறத்தாழ 39.57 கோடி மக்கள் தங்களது மாநிலத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ளனர்.
- ஏறத்தாழ 5.43 கோடி மக்கள் தங்களது சொந்த மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

## முதியோர்களுக்காக CARE4U என்ற ஆண்ட்ராய்டு செயலி

- கரக்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு குழுவினர் முதியோர்களுக்காக ஆண்ட்ராய்டு செயலி ஒன்றை வடிவமைத்துள்ளனர்.
- இந்தச் செயலியானது பராமரிப்பாளரை முதியோருடன் இணைக்கின்றது. இது "முதியோருக்கு மருந்தை நினைவூட்டல்" வசதியைக் கொண்டுள்ளது.
- இந்தச் செயலி மருந்து தொடர்பான முந்தையக் கணக்குகள், எதிர்விளைவு தொடர்பானவை, SOS பொத்தான், நிகழ்நேர இடம் குறித்த கண்காணிப்பு மற்றும் பிறவற்றைக் கொண்டுள்ளது.

## தகவல் அறியும் உரிமைத் திருத்த மசோதா, 2019

- சமீபத்தில் மக்களவையில் நிறைவேற்றப்பட்ட தகவல் அறியும் உரிமைத் திருத்த (Right to Information - RTI) மசோதா, 2019 ஆனது மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

### THEN AND NOW

**TERM**

**2005 ACT:** Chief Information Commissioner (CIC) and Information Commissioners (ICs) at central and state levels will serve for five years.

**2019 BILL:** Central government will notify the term of office.

**SALARY**

**2005 ACT:** At central level, salary of CIC and ICs equivalent to salary of Chief Election Commissioner and Election Commissioners, respectively. At state level, equivalent to salary of Election Commissioners and Chief Secretary, respectively.

**2019 BILL:** Salaries, allowances, and other terms and conditions of service of central and state CIC and ICs will be determined by the central government.

**DEDUCTIONS**

**2005 ACT:** At the time of appointment, if CIC and ICs (at central and state levels) are receiving pension or any other retirement benefits for previous government service, their salaries will be reduced by an amount equal to that pension. Previous government service includes service under: (i) the central government, (ii) state government, (iii) corporation established under a central or state law, and (iv) company owned or controlled by the central or state government.

**2019 BILL:** The Bill removes these provisions.

*Source: PRS Legislative Research*

- இந்த மசோதாவானது மாநிலங்கள் மற்றும் மத்தியில் தலைமைத் தகவல் ஆணையர்

(CIC - Chief Information Commissioner) மற்றும் பிற தகவல் ஆணையர்கள் ஆகியோரின் "பதவிக் காலம் மற்றும் விதிமுறைகளை" மாற்றி அமைக்கின்றது.

- மத்திய அரசானது தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் பிற தகவல் ஆணையர்கள் ஆகியோரின் ஊதியம் மற்றும் படி நிலைகளை நிர்ணயிக்கும் அதிகாரத்தை "தன்னகத்தே" கொண்டுள்ளது.
- கணிப்பின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 60 இலட்ச RTI விண்ணப்பங்கள் பதிவு செய்யப் படுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவில் இரகசியக் கடற்படைத் தளம் – ரியாம்

- தாய்லாந்து வளைகுடாவில் உள்ள ஒரு கடற்படைத் தளத்தின் பிரத்தியேகப் பயன்பாட்டிற்குச் சீனாவை அனுமதிக்கும் "இரகசிய ஒப்பந்தம்" ஒன்றில் சீனா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.
- ரியாம் கடற்படைத் தளம் என்பது தாய்லாந்து வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ள கம்போடியா கடற்படையால் நிர்வகிக்கப்படும் ஒரு தளமாகும்.
- சீனா அடுத்த 30 ஆண்டுகளுக்கு தனது இராணுவ வீரர்களை அங்கு நிறுத்தவும், ஆயுதங்களை அங்கு சேமித்து வைக்கவும், போர்க் கப்பல்களை அங்கு நிறுத்தி வைக்கவும் திட்டமிட்டுள்ளது.
- இது சீனாவின் அயல்நாட்டில் உள்ள 2-வது கடற்படைத் தளமாக விளங்கும். 2017 ஆம் ஆண்டில் டிஜிபவுட்டியில் தனது கடற்படைத் தளத்தை சீனா திறந்துள்ளது.




## நீருக்கடியில் அமைந்த இராணுவ வாகனங்கள் அருங்காட்சியகம்

- ஜோர்டன் நாடு அகாபா கடற்கரைக்கு அருகில் செங்கடலின் கீழ்ப்பரப்பில், தனது

முதலாவது நீருக்கடியிலான இராணுவ வாகனங்கள் அருங்காட்சியகத்தைத் திறந்துள்ளது.

- இந்த அருங்காட்சியகத்தில் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்ட 19 இராணுவ வன்பொருள் வாகனங்கள் உள்ளன. இந்த அருங்காட்சியகம் கடலுக்கடியில் 92 அடி ஆழம் வரை மூழ்கியுள்ளது.
- இந்தத் தனித்துவ சுற்றுலா அனுபவமானது ஏற்கெனவே புகழ்பெற்று விளங்கும் அகாபா டைவிங் (மூழ்கும்) பொழுதுபோக்கு இடத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

***செங்கடல்***

- செங்கடல் என்பது ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா ஆகியவற்றிற்கு இடையே அமைந்த இந்தியப் பெருங்கடலின் கடல்நீர் நுழைவுப் பகுதியாகும்.
- இது உலகளாவிய இயற்கை நிதியத்தினால் (WWF - World Wide Fund for Nature) சர்வதேச 200 சூழலியல் பிரதேசமாக (சுற்றுச்சூழலுக்கு உகந்த) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- சர்வதேச 200 சூழலியல் பிரதேசங்கள் பட்டியலில் உள்ள பாதிக்கும் மேற்பட்ட சூழல் பிரதேசங்கள் “அருகிவரும் பகுதிகளாக” தரப்படுத்தப்பட்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## யமுனை நீர்ப் பாதுகாப்புத் திட்டம்

- தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT - National Green Tribunal) தில்லி அரசின் யமுனை நீர்ப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் NGT யினால் பரிந்துரைக்கப்பட்ட இந்தத் திட்டமானது, “மாய்லி சீ நிர்மல் யமுனை புனரமைப்புத் திட்டம்” என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் பின்வருவனவற்றின் மூலம் குறிப்பாகக் கோடைக் காலத்தின் போது தேசியத் தலைநகரில் நீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - யமுனை – சமவெளிப் பகுதியில் நீர்ப் பாதுகாப்பு
  - நீர்த் தேக்கங்களைக் கட்டமைத்தல்.

# இதரச் செய்திகள்

## விஜய் நடவடிக்கை – கார்கில் போர் 20வது ஆண்டு

- கார்கில் போர் என்பது காஷ்மீரில் உள்ள கார்கில் மாவட்டம் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே 1999 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற ஒரு ஆயுதம் தாங்கிய போராகும்.
- மேலும் இது “விஜய் நடவடிக்கை” என்றும் அழைக்கப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் தேதியானது பாகிஸ்தான் ஊடுருவல்களுக்கு எதிராக இந்தியா நடத்திய விஜய் நடவடிக்கை வெற்றி பெற்றதின் 20-வது ஆண்டு நினைவைக்

குறிக்கின்றது.

- இந்திய இராணுவம் இந்திய விமானப் படையின் உதவியுடன் பாகிஸ்தான் படைகளை திரும்பப் பெறச் செய்து, அனைத்து உயரிய மலைப் பகுதிகளையும் கைப்பற்றியது.




- - - - - - - - - - - - - - -